



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

கடவுள் சாஸ்வதமானவர், நேற்றும், இன்றும், நாளையும் ஒன்றுபோல் மாற்றமில்லாமல் இருப்பவர். எல்லா இடங்களிலும் இருப்பவர்.

ईशानो भूतभव्यस्य स एवाद्य उ श्व: ஈஶானோ பூ⁴தப⁴வ்யஸ்ய ஸ ஏவாத்³ய உ ஶ்வ:



ஒவ்வொரு மனிதனும் அவர் மேல் பக்தி வைத்து, கீதை போன்ற சாஸ்த்ரங்களில் அவர் காட்டிய வழியில் வாழ்வதுதான் நல்லது. அவரைப் பல உருவங்களில் பூஜிக்கலாம். எல்லா உருவங்களும் அவருடையதுதான். அவர்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

பக்தனின் பக்தி விசேஷத்தைப் பொறுத் அருளுகிறார். எல்லா இடங்களிலும் வ்யாபித்திருக்கின்ற கடவுளை கோயிலில் மட்டுமே எதற்காக பூஜிக்கவேண்டும்? அவர் கோயிலில் மட்டும் தான் தோன்றுவாரா?' என்று சிலருக்கு ஸந்தேஹமுண்டாகலாம்.

கடவுள் எல்லா இடங்களிலும் நிறைத்திருந்தாலும் அவருடைய ப்ரபாவம். ஸான்னித்யம் ஆகியவை கோயிலிலுள்ள விக்ரஹத்திற்கு விசேஷமாக உள்ளது. கும்பாபிஷேகத்திற்குப் பிறகு பக்தனின் பக்தியை ஏற்றுக்கொள்ளும் சக்தி அந்த விக்ரஹத்திற்கு வந்துவிடுகிறது அதனால் அவர் மகிழ்ச்சியடைந்து பக்தனுக்கு அருள்பாலிக்கிறார் என்பதே இதற்கான பதில்.

இதைத்தான் ஸ்ரீஆதிசங்கரபகவத்பாதர் தமது பாஷ்யத்தில் सर्वगतोऽपीश्वरस्तत्रोपास्यमान: प्रसीदति । ஸர்வக3தோ(அ)பீஶ்வரஸ்தத்ரோபாஸ்யமான: ப்ரஸீத3தி . सर्वगतस्यापि ब्रह्मण उपासनार्थ: प्रदेशविशेषपरिग्रहो न विरुध्यते । ஸர்வக3தஸ்யாபி ப்3ரஹ்மண உபாஸனார்த2: ப்ரதே3ஶவிஶேஷபரிக்3ரஹோ ந விருத்4யதே . என்று பல இடங்களில் விவரித்துள்ளார். ஆகையால் எல்லா இடங்களிலும் நிறைத்திருக்கும் கடவுளை கோயிலில் வழிபடுவதில் தவறேதுமில்லை. மேலும்,

अर्चादावर्चयेत्तावदीश्वरं मां स्वकर्मकृत् ।
यावन्नवेद स्वहृदि सर्वभूतेष्ववस्थितम् ॥

அர்சாதா3வர்சயேத்தாவதீ3ஶ்வரம்’ மாம்’ ஸ்வகர்மக்ரு’த் .
யாவன்னவேத3 ஸ்வஹ்ரு’தி3 ஸர்வபூ4தேஷ்வவஸ்தி2தம் ..

என்று பகவானே பாகவதத்தில் கூறியுள்ளார்.

அதாவது, எல்லா ப்ராணிகளிலும் இருக்கும் என்னை எதுவரை ஒருவன் தனது ஹ்ருதயத்தில் உணரவில்லையோ அதுவரை தனது கர்மாக்களை அனுஷ்டித்துக்கொண்டு ஈச்வரனான என்னை விக்ரஹம் போன்றவற்றில் அவகாசத்திற்கேற்றபடி பூஜிக்கவேண்டும் என்று பகவான் கூறியுள்ளார். இதை நன்றாகப் புரிந்துகொண்டு உருவமற்ற ஈச்வானை உருவ வடிவத்தில் பூஜை செய்து அவரது அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகவேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்.

நன்றி - அம்மன் தரிசனம்

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

### காணாபத்யம்

**27.** க்ஷிப்ர-ப்ரஸாத கணபதி



த்ருதபாஸாங்குச கல்பலதாஸ் வரதஸ்ச பீஜபூரயுத:

ஸஸிஸகல கலிதமௌளி: த்ரிலோசநோருணஸ்ச கஜவதந:

பாஸூர பூஷணதீப்தோ ப்ருஹதுதர: பத்ம விஷ்டரோல்லஸித:

விக்நபயோதரபவந: கரத்ருத கமலஸ்ஸதாஸ்து பூத்யை

பாசம், அங்குசம், கற்பகக் கொடி, வரத முத்திரை, தாமரை, தர்ப்பை தாங்கிய ஆறு திருக்கரங்களுடன், துதிக்கையில் மாதுளையைத் தரித்தவரும்,, சந்த்ரன் ஒளி வீசும் திருமுடி(மௌலி)யுடன் கூடியவரும் , முக்கண்ணரும், சிவந்த மேனியரும், ஆனை முகத்தவரும், ஒளிரும் ஆபரணங்கள் இலங்கும் பெருவயிறு உடையவரும், பத்மாசனத்தில் இருப்பவரும், மேகத்தைத் தாக்கும் காற்றைப் போன்றவரும், தாமரையைக் கையில் தரித்தவரும், (பிரார்த்தித்த) உடனே வந்து செல்வங்களருளும் க்ஷிப்ர ப்ரஸாத கணபதியைத் துதிக்கிறேன்.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

**28.** உத்தண்ட கணபதி



கல்ஹாராம்புஜ பீஜபூரக கதா தந்தேக்ஷூ பாணைஸ்ஸதா


பிப்ராணோமணி கும்பஸாலி கலஸோ பாஸஞ்ச சக்ராந்விதம்

கௌராங்க்யா ருசிராரவிந்த கரயா தேவ்யாஸ் ஸதாஸம்யுத:

ஸோணாங்கஸ் ஸூபமாதநோது பஜதாம் உத்தண்ட விக்நேஸ்வர:


நீலோத்பலம், தாமரை, மாதுளை, கதை, தந்தம், கரும்பு, வில், நெற்கதிர், கலசம், பாசம், அம்பு ஆகியவற்றைக் கரங்களில் தரித்தவரும், கைகளில், தாமரை மலரைத் தாங்கி நிற்கும் பச்சை வண்ண தேவியுடன் எப்போதும் இருப்பவரும், மங்களங்கள் அருளுபவருமான உத்தண்ட கணபதியைத் துதிக்கிறேன்.

(தொடரும்...)



# Voice of Jagadguru

advaitam paramanandam an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## நவராத்திரி

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)


இந்த வசந்த நவராத்திரி வசந்த நவராத்திரி யோகம் எனும் பக்தி நிலையை தரக் கூடியது.வசந்த காலத்தில் பகல் பொழுது அதிகமாக இருப்பதால், வசந்த நவராத்திரி பூஜைகள் பகலிலேயே நடைபெறுகின்றன. வசந்த நவராத்திரியை லலிதா நவராத்திரி; என்றும் அழைப்பார்கள்.



வசந்த நவராத்திரி என்பது கானகத்தில், கந்த மூலிகைகளைக் கொண்டு செய்யக் கூடியதாகும். இதை ராமபிரான் கானகத்தில் இருந்தபோது, நாரத முனிவர் நடத்தி வைத்ததாக, ராம சரிதம் சொல்கிறது. புராணத்தில்

பங்குனியும், புரட்டாசியும் எமதர்ம ராஜனின் கோரைப்பற்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு மாத காலங்களும் நோய்க் கிருமிகள் பரவும் காலமாக இருப்பதாகவும், தெய்வத்தின் அருள் மனிதருக்குக் கிடைப்பதில் தடை ஏற்படும் காலம் என்றும் சொல்லப்படுகிறது. எனவேதான் இந்த கால கட்டத்தில் அம்பாளை வழிபடும் நவராத்திரி விரதத்தை கடைப்பிடிக்க முன்னோர்கள் வலியுறுத்தியுள்ளனர்.
மேரு அல்லது ஸ்ரீசக்ரம் அமைந்திருக்கும் ஆலயங்களில் வசந்த நவராத்திரி பொதுவாகக் கொண்டாடப்படும்.


வசந்த நவராத்திரியை அனுஷ்டிக்கிறவர்களுக்கு கடன் தொல்லை கள் தீர்வதோடு, கணவன்-மனைவி உறவு பலப்படும்; அன்யோன்யம் உண்டாகும். அக்கினி புராணத்தில் ஒரு வருடத்தில் 4 நவராத்திரிகளையும் கொண்டாட முடியாதவர்கள் சாரதா நவராத்திரி மற்றும் வசந்த நவராத்திரியையாவது விரதம் அனுஷ்டித்து கொண்டாடுவது அவசியம் என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே பங்குனி மாதம் அனுஷ்டிக்கப்படும் வசந்த நவராத்திரியை சக்தி வழிபாடு செய்து சகல சௌபாக்கியங்களையும் பெறலாம்.



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹாஸ்வாமிகள்)

ஸ்ரீ தேவியையே ஸ்ரீவித்யா (ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர-நாமத்தில் 585-ஆவது பெயர்) என்று அழைக்கின்றோம். முதன் முதலில் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்திற்கு பாஷ்யம் (வர்ணனைகள்) எழுதியவர் ஸ்ரீ பாஸ்கர ராயர், வரிவஸ்யா ரஹஸ்யம் என்ற தனது நூலில் இந்த பெயருக்கு 15 வெவ்வேறு அர்த்தங்களை அளிக்கின்றார் –

i) பஞ்சதஶீ வித்யா வடிவத்தில் இருப்பவர்.
ii) வித்யா நான்கு வகைகள். அவை முறையே;

i) யக்ஞ வித்யா – செயல்களைப் பற்றி
ii) மஹா வித்யா – தெய்வங்களுக்கு பக்தி செலுத்துதல்
iii) குஹ்ய வித்யா – மந்திரங்களின் ரகசிய அறிவியல்
iv) ஆத்ம வித்யா – ப்ரஹ்மத்தின் அறிவியல்

வித்யா என்ற சொல்லுக்கு இவ்வாறு பல அர்த்தங்கள் உள்ளன. ஸ்ரீ தேவி இந்த எல்லா வடிவங்களிலும் இருக்கின்றாள். விஷ்ணு புராணம் கூறுகின்றது, “ஓ நியாயமான ஒன்று, தியாக அறிவியல், உயர்ந்த அறிவியல், இரகசிய அறிவியல் மற்றும் ஆன்மீக விஞ்ஞானம். ஓ தேவி, நீ இவையெல்லாம், இரட்சிப்பின் சிறந்தவள்; நீயும் தர்க்கம், த்ரயீ, வார்தா, வர்த்தகம் மற்றும் நீதி”;

யக்ஞ வித்யா மஹா வித்யா குஹ்ய வித்யா ச ஶோபனே|
ஆத்ம வித்யா ச தேவீ த்வம் விமுக்தி பலதாயினீ ||
ஆன்வீக்ஷிகீ த்ரயீ வார்தா தண்டனீதிச்த்வமேவ ச ||

iii) பஞ்சதஶீ மந்த்ரத்தின் ஒவ்வொரு குழுவும் காயத்ரீ மந்திரத்தின் பொருளை விளக்குகின்றது என்று திரிபுர தாபினி உபநிஷத் கூறுகின்றது.
iv) நித்யா ஷோடஶிகார்ணவத்தில் ஆறு அர்த்தங்கள் கொடுக்கப் பட்டுள்ளன.
v) சமீபத்திய காலங்களில், கேரளாவில் ஒரு பெரிய பக்தர் ஸ்ரீ வீரராகவ ஶாஸ்த்ரி, இன்னும் சில அர்த்தங்களை அளித்துள்ளார். இந்த பெயர்கள் ஶ்ருங்கேரி மடத்தின் 33-ஆவது பீடாதிபதி, ஸ்ரீ அபிநவ ந்ருஸிம்ஹ பாரதி சுவாமிகளுக்கு வாசித்துக் காட்டப்பட்டன, அவரும் தலையசைத்து ஆமோதித்தார்.
vi) மிகக் குறைந்த எழுத்துக்களுடன் முன்மாதிரியான அர்த்தங்களைத் தருவதால், அவளை ஸ்ரீவித்யா என்று அழைப்பது பொருத்தமானது. ஸ்ரீ லலிதா த்ரிஶதியின் பலஶ்ருதி பகுதி கூறுகின்றது என்பதைக் கவனத்தில் கொள்ளலாம் – இரட்சிப்பின் பாதை ஸ்ரீவித்யா மட்டுமே. (தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)



# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

## 4. பீடாரோஹணம்



சரீரம் மிகவும் தளர்ச்சி யடைந்த ஸமயத்திலும் கோகர்ணம் போய் ஸ்ரீ மஹாபலேசுவரரை தர்சித்து வரவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருந்து வந்தது. ஆனால் அவர்களுடைய வயதையும் சரீர ஸ்திதியையும் கவனிக்கும்போது அந்த ஸங்கல்பத்தை நிறைவேற்றிக் கொடுக்க யாருக்குமே தைர்யமில்லாமலிருந்தது. இப்படியிருக்க, ஒரு நாள் இரவில் ஸ்ரீமத் ஆசார்யார், "கோகர்ணத்திலிருந்து நம்மை அழைத்துக் கொண்டு போவதற்கு பிராஹ்மணர்கள் வந்திருக்கிறார்கள். புறப்படுவதற்கு மேனாப் பல்லக்கு ஸித்தமாகட்டும்" என்று சொல்லிவிட்டு, சில நிமிஷங்கள் சென்று, "மேனா ஸித்தமாகிவிட்டதா? அதில் நம்மை உட்கார வையுங்கள்" என்று சொன்னார்கள். சுமார் ஒரு மணி நேரம் கழித்து, "இதென்ன ஆச்சர்யம்? இவ்வளவு வேகமாய் நம்மை கோகர்ணத்திற்கு அழைத்துக் கொண்டு போய் திருப்பி அழைத்து வந்து விட்டார்களே! நம் பல்லக்கு போகிகள் நல்ல ஸாமர்த்தியசாலிகள். அவர்களுக்கு இனாம் கொடுங்கள்" என்று சொன்ன பிறகு பேசவேயில்லை. இதெல்லாம் ஏதோ ஸ்வப்னத்தில் பேசுகிறார்கள் என்றே பக்கத்திலுள்ளவர்கள் நினைக்கும்படி இருந்தது. மறுநாள் அதாவது பிரமாதி வருஷம் ஜ்யேஷ்ட சுக்ல த்விதீயை (23-5-1879) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீமத் ஆசார்யார் விதேஹகைவல்யம் அடைந்துவிட்டார்கள்.

இங்கு ஒரு விசேஷ ஸம்பவம் குறிப்பிடத்தக்கது. கோகர்ணத்திலுள்ள ஸ்ரீமடம் அதிகாரியான கோபால சாஸ்திரிகள் என்பவர் முந்தின நாள் ராத்திரி நித்திரை செய்யும்போது ஸ்வப்னத்தில், தான் கோகர்ணம் மஹாபலேசுவரர் தேவஸ்தானத்தில் இருந்தது போலவும், அவ்விடத்திற்கு ஸ்ரீமத் ஆசார்யார் பல்லக்கில் வந்தது போலவும், தான் பரபரப்புடன் எழுந்து நமஸ்கரித்து விட்டு அதிவேகமாய் மஹாபலேசுவரர் ஸன்னிதிக்குப் போய் பூஜை செய்து கர்ப்பூர நீராஜனம் செய்ததுபோலவும் கண்டார். இவ்விஷயம் கேட்போர் யாவருக்கும்


ஆச்சர்யத்தை யுண்டு பண்ணிற்று. ஸ்ரீமத் ஆசார்யார் ஸத்ய ஸங்கல்பர் என்பதை கடைசிவரையில் காட்டினாரென்பது நன்கு தெரிகிறது.

இந்த ஸமயம் சின்ன ஸ்வாமிகளவர்களுக்கு வயது இருபத்திரண்டு. தன்னை 9-வது வயதில் தருவித்து ஸன்யாஸம் கொடுத்து பதின்மூன்று வருஷ காலம் ஒரு தினமாவது இடைவிடாமல் கூடவே வைத்துக் கொண்டு வெகு அபிமானத்துடனும் கருணையுடனும் ஆதரித்து ஸம்ரக்ஷணை செய்து பலவிதத்தில் விருத்திக்கு கொண்டு வந்த குருநாதர் மறைந்ததும் தாங்கமுடியாத துக்கம் ஏற்பட்டது. தானாக ஸமாதானம் செய்து கொள்ளவும் முடியவில்லை. மற்றவர்கள் ஸமாதானப் படுத்தவும் முடியவில்லை. எப்படியும் கொஞ்சம் தைர்யத்தை அவலம்பித்துக் கொண்டு மேல் நடத்தவேண்டிய ஸம்ஸ்காரங்களை கூடவிருந்து நடத்தினார்கள்.

குருநாதரின் அதிஷ்டானத்தை அவருடைய குருவினுடையவும் பரம குருவினுடையவும் அதிஷ்டானங்களுக்கு நடுவில் ஏற்படுத்தினார்கள். அன்று எல்லா காரியங்களும் முடிவதற்குள் அர்த்த ராத்திரி ஸமயமாகிவிட்டது. அன்று பூராவும் ஆஹாரம் செய்வதற்கில்லை. நித்திரையும் வரவில்லை. தன் குருநாதரையே நினைத்து நினைத்து அவர் குணங்களை சொல்லிக் கொண்டு, அம்மஹான் தன் விஷயத்தில் காட்டி வந்த ப்ரீதியையும் அனுக்ரஹத்தையும் பற்றி பலவிதமாய் நினைத்து பிரலாபித்துக் கொண்டுமே இருந்தார். அந்த ஸமயம் கொஞ்சம் பிரக்ஞாபங்கம் ஏற்பட்ட மாதிரியிருந்தபோது, தன் முன்பு குருநாதர் தர்சனமளித்தது போலவும், தான் உடனே எழுந்திருந்து நமஸ்கரித்தது போலவும், அப்பொழுது அவர்கள் "என்ன இது? பெண்டுகளைப் போல் அன்னம் ஜலம் எடுத்துக் கொள்ளாமல் அழுவது எதற்காக? நாம் எங்கே போய்விட்டோம்? இங்கேயே இருக்கிறோமே?" என்று கம்பீரமான த்வனியில் சொன்னதாகவும் தோன்றிற்று. இதைக் கேட்டதும், சரீரத்திலிருக்கும்போது பரிச்சின்னமாயிருந்தவர் இப்பொழுது அகண்டராய் வியாபகராயிருக்கிறார் என்ற தீர்மானம் ஏற்பட்டு தைர்யத்தை அடைந்து தானே ஸமாதானம் செய்து கொண்டார்கள். பிறகு சிஷ்யர்களின் வேண்டுகோளின் பேரில் வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் கிரமப்படி பட்டாபிஷேக மஹோத்ஸவம் நடத்தப்பட்டது.

தன் குருநாதர் ஸித்தியடைந்த தினம் முதல் அவர்கள் ஸமாதியில் பிரதி தினமும் தானே விசேஷ பக்தி சிரத்தையுடன் பூஜை செய்து வந்தார்கள். தன் ஆசிரமத்திற்கேற்பட்ட கர்மானுஷ்டானங்களை செய்து கொண்டும், ஸ்ரீ சாரதா சந்திர மௌலீசுவர ஆராதனைகளை செய்து கொண்டும், சிஷ்யர்களுக்குத் தர்க்க சாஸ்திரத்திலும் வேதாந்த சாஸ்திரத்திலும் பாடம் சொல்லிக்கொண்டும், தானாகவே கிரந்தங்களைப் பரிசீலனை செய்து கொண்டும், குருநாதரிடமிருந்து கிரஹிக்கப்பட்ட யோக மார்க்கங்களை அப்யாஸத்திற்கு கொண்டு வந்தும், ஆனந்தமாக ஆறு வருஷ காலம் சிருங்கேரியிலேயே இருந்து வந்தார்கள்.

(தொடரும்…)

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ॥ श्रीगणेशपञ्चरत्नम् ॥

## ஸ்ரீகணேச பஞ்சரத்னம்



मुदा करात्तमोदकं सदा विमुक्तिसाधकं
कलाधरावतंसकं विलासिलोकरक्षकम् ।
अनायकैकनायकं विनाशितेभदैत्यकं
नताशुभाशुनाशकं नमामि तं विनायकम् ॥ १ ॥

முதா3 கராத்தமோத3கம்’ ஸதா3
விமுக்திஸாத4கம்’
கலாத4ராவதம்’ஸகம்’
விலாஸிலோகரக்ஷகம் .
அநாயகைகநாயகம்’
விநாஶிதேப4தை3த்யகம்’
நதாஶுபா4ஶுநாஶகம்’ நமாமி தம்’
விநாயகம் .. 1 ..

கையில் கொழுக்கட்டையுடன் சிரஸில் சந்திரனுடன் ஆனந்தமாக இருக்கும் கணேசமூர்த்தியை தியானிக்கிறார். அவர் ஆனந்தமாக இருப்பதால் நமக்கும் பரமானந்தமான முக்தியைத் தருகிறார். இதுமட்டும் அல்ல. அவரை வணங்கினால், நமக்கு ஏற்படும் எல்லாத் துன்பங்களையும் விலக்கி நன்மையைத் தருவார். உலகுக்குத் தீங்கு செய்த கஜா ஸுரனைக் கொன்று காப்பாற்றியவர். அவரே ஜகத் காரணமான பரமாத்மா. அவருக்கு மேற்பட்டவர் ஒருவரும் இல்லை ஸர்ப்பங்களைக் காப்பாற்றுவதுடன் அவைகளினின்று நம்மையும் காப்பாற்றுபவர். இந்த விநாயகரை வணங்குகிறேன்.

नतेतरातिभीकरं नवोदितार्कभास्वरं
नमत्सुरारिनिर्जरं नताधिका पदुद्धरम् ।
सुरेश्वरं निधीश्वरं गजेश्वरं गणेश्वरं
महेश्वरं समाश्रये परात्परं निरन्तरम् ।। २ ।।

நதேதராதிபீ4கரம்’ நவோதி3தார்கபா4ஸ்வரம்’
நமத்ஸுராரிநிர்ஜரம்’ நதாதி4கா பது3த்3த4ரம் .
ஸுரேஶ்வரம்’ நிதீ4ஶ்வரம்’ க3ஜேஶ்வரம்’ க3ணேஶ்வரம்’
மஹேஶ்வரம்’ ஸமாஶ்ரயே பராத்பரம்’ நிரந்தரம் .. 2 ..

உதயசூரியனைப்போல ஒளியுடன் விளங்குபவர். தேவர்களும் அஸுரர்களும் தங்கள் காரியம் இடையூரின்றி நிறைவேற இவரை வணங்குகின்றனர். இவரை வணங்காதவர் மிகுந்த பயத்தால் துன்புறுவர். வணங்குபவர்களுக்கு எவ்வித ஆபத்துக்களும் விலகும். பூதகணங்களின் பாதை இருக்காது. தேவர்களின் அருளும் எல்லா ஐசுவர்யங்களும் கிடைக்கும். எல்லாவற்றிற்கும் மேற்பட்ட ஈசுவரன் இவர். (தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## श्रीमन्नारायणीयम्

## ஶ்ரீமந்நாராயணீயம்

**(दशकम्) - தசகம் 3**

भक्ति - प्रार्थना

பக்தி - ப்ரார்த்தனா பக்தியை வேண்டுதல்

भवद्भक्तिस्तावत् प्रमुख मधुरा त्वगुण रसात्
किमप्यारूढा चेदखिल परिताप-प्रशमनी ।
पुनश्चान्ते स्वान्ते विमलपरिबोधोदय मिलन्
महानन्दाद्वैतं दिशति किमतः प्रार्थ्य- मपरम् ।। ६ ।।

ப4வத்3ப4க்திஸ்தாவத் ப்ரமுக2 மது4ரா த்வகு3ண ரஸாத்
கிமப்யாரூடா4 சேத3கி2ல பரிதாப-ப்ரஶமனீ .
புனஶ்சாந்தே ஸ்வாந்தே விமலபரிபோ3தோ4த3ய மிலன்
மஹானந்தா3த்3வைதம்’ தி3ஶதி கிமத: ப்ரார்த்2ய- மபரம் .. 6 ..




உம்மிடம் பக்தி ஆரம்பத்திலேயே உம்முடைய குண ரஸானு பவத்தால் இனிமையானது. சிறிது விருத்தியடைந்துவிட்டாலோ எல்லாத் தாபங்களையும் அறவே போக்கிவிடுகிறது. மேலும் முடிவில் உள்ளத்தில் நிர்மலமான ஞானத்தை உதிக்கச் செய்து பிரம்மானந்த அத்வைதானுபவத்தைக் கொடுக்கிறது. அதற்குமேல் வேண்டுவ தென்ன?

विधूय क्लेशान् मे कुरु चरणयुग्मं धृतरसं
भवेत्क्षेत्रप्राप्तौ करमपि च ते पूजनविधौ ।
भवन्मूर्त्यालोके नयनमथ ते पादतुलसी-
परिघ्राणे घ्राणं श्रवणमपि ते चारुचरिते ।। ७ ।।


விதூ4ய க்லேஶான் மே குரு சரணயுக்3மம்’
த்4ரு’தரஸம்’
ப4வேத்க்ஷேத்ரப்ராப்தௌ கரமபி ச தே பூஜனவிதௌ4 .
ப4வன்மூர்த்யாலோகே நயனமத2 தே பாத3துலஸீ-
பரிக்4ராணே க்4ராணம்’ ஶ்ரவணமபி தே சாருசரிதே .. 7 ..

எனது கால்கள் உம்முடைய க்ஷேத்திரங்களுக்குச் செல்வதிலும் கைகள் உமக்கு பூஜை செய்வதிலும், கண்கள் உமது மூர்த்தியை தரிசிப் பதிலும், மூக்கு உமது பாதத்தில் அர்ச்சித்த துளஸியை முகர்வதிலும் காதுகள் உமது



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita






கதைகளைக் கேட்பதிலும் இன்புறுவதற்கு என்னுடைய துன்பங்களைப் போக்கி அருள்புரியும்.

प्रभूताधिव्याधि प्रसभ चलिते मामकहृदि
त्वदीयं तद्रूपं परमरत - चिद्रूपमुदियात् ।
उदं चद्रोमांचो गलित - बहु - हर्षाश्रु निवहो
यथा विस्मर्यासं दुरुपशम - पीडापरिभवान् ॥ ८ ॥

ப்ரபூ⁴தாதி⁴வ்யாதி⁴ ப்ரஸப⁴ சலிதே மாமகஹ்ரு’தி³
த்வதீ³யம்’ தத்³ரூபம்’ பரமரத - சித்³ரூபமுதி³யாத் .
உத³ம்’ சத்³ரோமாஞ்சோ க³லித - ப³ஹு - ஹர்ஷாஶ்ரு நிவஹோ
யதா² விஸ்மர்யாஸம்’ து³ருபஶம - பீடா³பரிப⁴வான் .. 8 ..



அளவற்ற கவலைகளாலும் நோய்களாலும் மிகவும் சலிக்கின்ற என்னுள்ளத்தில் உம்முடைய பரமரஸமான அந்த ஞான ஸ்வரூபம் உதிக்கும்படியும், ஆனந்தத்தால் மயிர்க்கூச்சும் கண்ணீர்ப்பெருக்கும் உண்டாகும்படியும் செய்து எப்படி தீராத பீடைகளின் துன்பத்தை மறப்பேனோ அப்படி அருள்புரியும்.

मरुद्गेहाधोश त्वयिखलु परांचोपि सुखिनो
भवत्स्नेही सोऽयं सुबहु परितप्ये च किमिदम् ।
अकीर्तिस्ते मा भूद्वरद गदभारं प्रशमयन्
भवद्भक्तोत्तंसं झटिति कुरु मां कंसदमन ॥ ९ ॥

மருத்³கே³ஹாதோ⁴ஶ த்வயிக²லு பராஞ்சோபி ஸுகி²னோ
ப⁴வத்ஸ்னேஹீ ஸோ(அ)யம்’ ஸுப³ஹு பரிதப்யே ச கிமித³ம் .
அகீர்திஸ்தே மா பூ⁴த்³வரத³ க³த³பா⁴ரம்’ ப்ரஶமயன்
ப⁴வத்³ப⁴க்தோத்தம்’ஸம்’ ஜ²டிதி குரு மாம்’ கம்’ஸத³மன .. 9 ..

குருவாயூரப்பா! உம்மிடம் பக்தியில்லாதவர்கள் கூட சுகமாக வாழ்கிறார்களே! உம்மிடம் பக்தி செய்யும் நான் மிகவும் தவிக்கிறேனே இது ஏன்? வரதா! (பக்தனைக் காப்பாற்றவில்லை என்ற) அபகீர்த்தி உமக்கு வர வேண்டாம். கம்ஸனை ஒழித்தவரே! என் வியாதிகளைப் போக்கி விரைவில் என்னை பக்தர்களிற் சிறந்தவனாகும்படி செய்தருளும்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

किमुक्तैर्भूयोभिस्तव हि करुणा यावदुदिया-
दहं तावद्देव प्रहितविविधार्त प्रलपितः ।
पुरः क्लृप्ते पादे वरद तव नेष्यामि दिवसान्
यथाशक्ति व्यक्तं नति - नुति - निषेवा विरचयन् ।। १० ।।

கிமுக்தைர்பூ4யோபி4ஸ்தவ ஹி கருணா யாவது3தி3யா-
த3ஹம்’ தாவத்3தே3வ ப்ரஹிதவிவிதா4ர்த ப்ரலபித꞉ .
புர꞉ க்ல்ரு’ப்தே பாதே3 வரத3 தவ நேஷ்யாமி தி3வஸான்
யதா2ஶக்தி வ்யக்தம்’ நதி - நுதி - நிஷேவா விரசயன் .. 10 ..



தேவா!மேலும் மேலும் சொல்லுவதால் ஆவதென்ன? வரதா! உமக்கு தயை எப்பொழுது ஏற்படுகிறதோ அதுவரை நான் பலவாறாகப் புலம்புவதைவிட்டு, என் முன் விளங்கும் உமது திருவடிகளில் என்னால் கூடிய வரை நன்றாக நமஸ்காரம், ஸ்தோத்திரம், பூஜை ஆகியவற்றைச் செய்து கொண்டு நாட்களைக் கழிக்கிறேன்.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்